# 05 மத்தியகால ஐரோப்பா

மத்திய காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட முக்கிய நிகழ்வுகளான கிறிஸ்தவ சமயத்தின் பரவல், நிலமானிய முறை, சிலுவை யுத்தம் என்பன ஐரோப்பிய பண்பாட்டில் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தின என்பதனை இந்த அத்தியாயத்தில் கற்றுக் கொள்வீர்கள்.

ஐரோப்பிய வரலாற்றை இலகுவாக கற்பதற்கு வரலாறு மூன்று காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன

1. புராதன காலம்
2. மத்திய காலம்
3. நவீன காலம்

## புராதன காலம் (கி.மு 1ஆம் நூற்றாண்டு - கி.பி 5ஆம் நூற்றாண்டு)

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் முதல் கி.பி 5 ஆம் நூற்றாண்டு வரையில் கிரேக்க, உரோம பண்பாடுகள் உயர்நிலையில் இருந்த காலப்பகுதியாகும்.

## மத்தியகாலம் (கி.பி. 5ஆம் நூற்றாண்டு - கி.பி 15ஆம் நூற்றாண்டு)

கி.பி 5ஆம் நூற்றாண்டில் உரோமப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர் ஐரோப்பாவில் நிலவிய உயர் பண்பாடு சீர்குலையத் தொடங்கியது. கிறிஸ்தவ சபையால் கட்டியெழுப்பப்பட்ட கல்வி, பண்பாட்டு வளர்ச்சி காரணமாக நிலைமை படிப்படியே முன்னேற்றம் அடையத் தொடங்கியது. கி.பி 15ஆம் நூற்றாண்டு வரை நிலவிய இக்காலப்பகுதி மத்திய காலம் எனப்படுகிறது.

## நவீன காலம் (கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்குப் பின்)

கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் பின்னர் மீண்டும் சிறந்த நாகரீகமொன்று உதயமாகியது. அக்காலம் முதல் தற்காலம் வரை இது வளர்ச்சியடைந்து வருகின்றது. இக்காலப் பகுதி **நவீன காலம்** எனப்படும்.

## கிறிஸ்தவ சமயத்தின் தோற்றமும் பரவலும்

ஐரோப்பாவில் ஒழுங்காக அமைப்புப் பெற்ற முதலாவது சமயம் கிறிஸ்தவ சமயமாகும். ஐரோப்பிய பண்பாட்டை கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமைந்ததும் கிறிஸ்தவ சமயமாகும்.

## கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்பம்

கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்ப கர்த்தா (ஸ்தாபகர்) கிறிஸ்துநாதராவார். அவர் பலஸ்தீனத்தில் சிறிய ஊராகிய பெத்லகேமில் பிறந்தார். தற்போது பாவனையில் உள்ள கிறிஸ்துவுக்குப்பின் எனப்படும் காலம் கிறிஸ்துவின் பிறப்பை முன்னிட்டே கணிப்பிடப்படுகிறது. கிறிஸ்தவர்களின் மதிப்பிற்குப் பாத்திரமான மரியாள், இயேசுவின் தாயாவாள். இயேசுவின் பிறப்பு நிகழ்ந்த காலத்தில் யூத இனத்தவர் உரோமப் பேரரசின் கீழ் இருந்தனர். உரோமப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய பலஸ்தீனாவின் கலிலேயப் பகுதியை ஏரோது எனும் யூத இன அரசன் ஆட்சி செய்தான். ஜெருசலேமின் ஆளுனராக உரோம இனத்தைச் சேர்ந்த பிலாத்து இருந்தான்.

யூதர்களின் மீட்பின் பொருட்டு மீட்பர் ஒருவர் வருவாரென யூதர்கள் நம்பினர். அக் காலத்தில் அவரது வருகையை மக்கள் எதிர்பார்த்தவண்ணமிருந்தனர். மீட்பரைப் பற்றிப் போதித்து அவரை வரவேற்க மக்களை ஆயத்தப்படுத்தியவர் திருமுழுக்கு யோவான் ஆவார். முப்பது வயது வரை கலிலேயாவில் நாசரேத் ஊரில் அமைதியாக வாழ்ந்த இயேசு, முப்பதாவது வயதில் திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றுத் தமது பகிரங்க வாழ்வை ஆரம்பித்தார். அவரது பகிரங்க வாழ்வு மூன்று வருடங்கள் மாத்திரமே நிலைத்தது.

உலகப் படைப்பு தொடர்பான கதை தொடக்கம் திருமுழுக்கு யோவான் வரை அதாவது இயேசுவிற்கு முற்பட்ட காலப் பகுதி பழைய ஏற்பாடு எனப்படுகிறது. இயேசுவின் காலந் தொடக்கம் அவரது சொல், செயல்கள் மற்றும் அவரது சீடர்களின் போதனைகள், செயல்கள் என்பன அடங்கிய பகுதி புதிய ஏற்பாடு எனப்படுகிறது. புதிய ஏற்பாட்டையும், பழைய ஏற்பாட்டையும் இணைத்து எழுதப்பட்ட நூலே பரிசுத்த வேதாகமம் என அறிமுகப்படுத்தப்படுகிறது.




*இயேசுவின் காலத்தில் பலஸ்தீனம்*
*படம் 5.1*

கிறிஸ்தவர்களின் புனித நூல் பரிசுத்த வேதாகமமாகும்.

கிறிஸ்துநாதர் போதித்த மதம் கிறிஸ்தவ மதம் எனப்படுவதுடன், அதன் மூலம் நீதி, அன்பு, இரக்கம் என்பன அடங்கிய இறை அரசு பற்றிப் போதிக்கப்பட்டது.


தான் மனிதாவதாரம் எடுத்த இறைமகன் என்றும், உலக மீட்பரென்றும் இயேசு போதித்தார். உலகில் இறையரசை நிறுவுவது இயேசுவின் செயலாக இருந்தது.

**இயேசுநாதரின் முக்கிய படிப்பினைகள் சில**

- முழு உலகையும் படைத்தவர் இறைவன்
- இறைவன் இரக்கமுடையவர்
- இறைவனின் அரசு அன்பு, சமாதானம், நீதி என்பவற்றைக் கொண்ட அரசாகும்.
- அந்த அரசு இப்போதே எம்மிடையே தோன்றியுள்ளது.
- இறையரசை ஏற்றுக் கொள்ளும் பொருட்டு நாம் எமது தவறுக்காக மனம் வருந்தி, எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.
- அன்பு அனைத்தையும் விட மேலானது.
- இறைவன் எம்மை அன்பு செய்தது போல நாமும் ஒருவர் ஒருவரை அன்பு செய்து சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும்.
- நாம் இறைவனிடம் விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்.

சாதாரண மக்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் இயேசு தனது போதனையை முன்வைத்தார்.

இயேசு யூத மதத்தை அழிப்பதற்கு அன்று, அதை நிறைவேற்றுவதற்கே வந்தார். எனினும் அவர் போதித்த சில விடயங்களாலும், அவர் தம்மை இறைமகன் என்றதாலும் கோபமடைந்த யூத சமூகமும், சமயத் தலைவர்களும் அவரைக் கொலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவ்வாறு அவர்கள் இயேசுவைப் பிடித்து மரணத்திற்கு ஏதுவான குற்றத்தை அவர்மீது சுமத்தினர். இயேசு உரோமப் பேரரசனான சீசருக்கு எதிராகப் போதித்து, மக்களைத் தூண்டியதாக அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டது. இராஜ துரோகம் செய்தோருக்கு மரணதண்டனை வழங்கும் முறையாக சிலுவையில் அறைந்து கொலை செய்யும் முறையே அன்று இருந்தது.



*இயேசுநாதரின் பிறப்பு*
*படம் 5.2*

இவ்வாறு யூதத் தலைவர்களின் வற்புறுத்தலால் ஆளுநர் பிலாத்துவால் இயேசு மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்டார்.

தாம் யூதத் தலைவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு மரணத்திற்கு உள்ளாக்கப்படுவதாகவும், மூன்றாம் நாள் மரணத்தினின்றும் தாம் உயிர்த் தெழுவதாகவும் இயேசு தம் சீடர்களுக்குக் கூறினார். இயேசு தாம் கூறியபடியே மூன்றாம் நாள் மரணத்தினின்றும் உயிர்த்தெழுந்ததுடன், தம் சீடர்களுக்குப் பலமுறை காட்சி கொடுத்தார். இயேசு மரித்த மூன்றாம் நாள் உயிர்ந்தெழுந்தது கிறிஸ்தவ சமயத்தினருக்கு முக்கிய நிகழ்வாகும். கிறிஸ்தவர்கள் தமது முக்கிய விழாவாகக் கொண்டாடப்படுவதும் இதனையேயாகும்.

கிறிஸ்து என்பது 'கிறிஸ்டோஸ்' என்ற கிரேக்க சொல்லிருந்து வந்ததாகும். இதன் கருத்து ''அருட்பொழிவு'' செய்யப்பட்டவர் (அபிஷேகம் செய்யப்பட்டவர்) என்பதாகும். அதாவது மனிதரின் மீட்புப் பணியை நிறைவேற்றும் பொருட்டு இறைவனால் அருட்பொழிவு செய்யப்பட்டவர் என்பதாகும். இதனால் அவரை இயேசுக் கிறிஸ்து என்கிறோம். கிறிஸ்தவர் என்ற சொல்லும் இந்தச் சொல்லிலிருந்து வந்ததேயாகும்.

## கிறிஸ்தவ சமயம் பரவுதல்

கிறிஸ்தவ சமயம் இயேசுவின் மரணத்தின் பின்னரே பரவத் தொடங்கியது. இயேசுநாதர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பன்னிரு சீடர்களைத் தெரிவு செய்து அதற்கான ஆயத்தங்களைச் செய்தார். இந்தப் பன்னிருவரும் திருத்தூதர்கள் என அழைக்கப்பட்டதுடன், மேலும் பலர் அவரது சீடர்களாகினர்.

இயேசு மரணத்தினின்றும் உயிர்த்த நாற்பதாம் நாள் விண்ணுலகை அடைந்தார். அவ்வாறு அவர் விண்ணுலகை அடையும் முன்னர் தம் சீடர்களை நோக்கி ஜெருசலம் தொடங்கி உலகம் முழுவதிலும் நற்செய்தியை அறிவிக்கும்படி (இறையரசு தொடர்பான செய்தி) கூறினார். இதன் பொருட்டு அவர்கள் திடத்தினைப் பெறும் வரையில் ஜெருசலேமில் தங்கியிருக்கும்படி வேண்டினார்.

இயேசு விண்ணுலகை அடைந்த பத்தாம் நாள் அதாவது அவரது உயிர்ப்பின் பின்னர் ஐம்பதாம் நாள் இயேசுவின் செய்தியை அவரது சீடர்கள் அறிவிக்கத் தொடங்கினர். இந்த நாள் பெந்தகொஸ்த திருநாள் எனவும் அழைக்கப்படுகிறது. பெந்தகொஸ்த என்பதன் கருத்து 50ஆவது நாள் என்பதாகும். அன்றைய தினமே ஜெருசலேமிலிருந்த யூதர்களும், ஏனைய நாடுகளிலிருந்து வந்திருந்த 3000 பேரும் இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. அன்று முதல் திருத் தூதர்களும், ஏனைய சீடர்களும் பல இடங்களுக்கு சிதறுண்டு போய் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பினர்.


ஆரம்ப யுகத்தில் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியோர் சமுதாயத்தில் அடிமட்டத்தில் உள்ளவர்களாக இருந்த போதிலும், கி.பி இரண்டாம் நூற்றாண்டளவில் உயர் வகுப்பினரைப் போலவே, கற்றவர்கள் பலரும் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றத் தொடங்கினர்.

கிறிஸ்தவ சமயம் தமது பேரரசு முழுவதும் பரவுவதை உரோமர்களால் பொறுக்க முடியவில்லை. இதனால் மூன்று நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவ மதத்திற்கான இடையூறுகள் ஆரம்பமாகியது. இவற்றில் முதல் இடையூறு கி.பி 55 - 63 வரை பேரரசன் நீரோவின் காலத்தில் நடைபெற்றது.

உரோம் நகருக்குக் கிறிஸ்தவர்கள் நெருப்பு வைத்தார்கள் எனக் கிறிஸ்தவர்கள் மீது பேரரசன் நீரோ குற்றம் சுமத்தி பிரச்சினையை ஆரம்பித்தான். ஆனால் தனது செயல்களை மறைப்பதற்காகப் பேரரசன் நீரோவே உரோம் நகருக்கு தீ வைத்து அந்தக் குற்றத்தைக் கிறிஸ்தவர்கள் மீது சுமத்தியதாக அக்காலத்தில் வாழ்ந்த பலராலும் கூறப்பட்டுள்ளது.



*உரோமில் அமைந்துள்ள புனித பேதுரு பேராலயம் (பெசலிக்கா) படம் 5.3*



*சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதர் படம் 5.4*

## கிறிஸ்தவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தண்டனைகள்:

- ✶ வரி செலுத்தாமை, படையில் பணிபுரியாமை போன்ற குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுக் கிறிஸ்தவர்கள் தண்டிக்கப்பட்டமை.
- ✶ பசியாக இருந்த சிங்கங்களுக்குக் கிறிஸ்தவர்கள் இரையாகப் போடப்பட்டனர்.
- ✶ உடலில் எண்ணெய் ஊற்றி, இரவில் தீப்பந்தமாக எரித்தல்.
- ✶ சிலுவை அறைதல் அல்லது அதற்கொப்பான தண்டனை வழங்கள்.

★ பேரரசின் அதிகாரத்தைப் பெறும் பொருட்டு நிலவிய போட்டியில் கொன்ஸ்டன்டைனுக்குக் கிறிஸ்தவர்களின் ஆதரவைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. கிறிஸ்தவர்களின் உதவியுடன் பேரரசனாக வந்த கொன்ஸ்டன்டைன் கி.பி 313 ஆம் ஆண்டு செய்து கொண்ட மிலான் உடன்படிக்கையின் மூலம் ரோமப் பேரரசு முழுவதும் கிறிஸ்தவ சமயம் உத்தியோக பூர்வமான சமயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.



*கொன்ஸ்டன்டைன், படம் 5.5*

★ பேரரசன் கொன்ஸ்டன்டைனும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக் கொண்டான்.

★ கி.பி. 380 ஆம் ஆண்டு பேரரசனான தியோடோசியஸ் கிறிஸ்தவ சமயம் தவிர்ந்த ஏனைய சமயங்கள் அனைத்தும் அஞ்ஞான மதம் எனக்கூறி அவைகளைப் பின்பற்றுவதைத் தடை செய்தான். அது முதல் கிறிஸ்தவ சமயம் ரோமப் பேரரசின் அரச மதமாகியதுடன் அது விரைவில் பரவவும் தொடங்கியது. பாப்பரசரும் குருமாரும் இம்மதம் பரவும் பொருட்டு ஒன்றிணைந்து செயற்பட்டனர்.

இவ்வாறான தண்டனைகளால் கிறிஸ்தவ சமயத்தை ஒழிக்க முயன்ற பொழுதிலும், அதனைச் செய்ய முடியாது போயின. சமயத்திற்காக உயிரிழந்தோர் தொகை அதிகரித்ததுடன் மேலும் பலர் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றத் தொடங்கினர்.

★ கி.பி 313 ஆண்டில் பேரரசன் கொன்லஸ்ன்டைன் உரோமப் பேரரசில் கிறிஸ்தவ சமயத்தை சட்டப்பூர்வமான மதமாக்கினார்.

★ கி.பி 380 ஆம் ஆண்டு போரரசன் நியடோசியால் கிறிஸ்தவ சமயத்தை உரோம போரரசின் அரச மதமாக்கினார்.

## பாப்பரசரும் திருச்சபையும்

### திருச்சபையின் ஆரம்பம்


கிறிஸ்தவ சமயம் ஆரம்பம் முதலே முறையான அமைப்பினையுடைய தொன்றாகக் காணப்பட்டது. கிறிஸ்துநாதரே சீடர்களிலிருந்து பன்னிருவரைத் தெரிவு செய்து அவர்களுக்குத் திருத்தூதர்கள் எனப் பெயரிட்டார். இந்தப் பன்னிருவரில் பேதுரு எனும் திருத்தூதர் தலைவராக நியமிக்கப்பட்டார். கிறிஸ்துநாதர் இவ்வுலக வாழ்வை முடித்த பின்னரும், பேதுரு அனைத்து சீடர்களாலும் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஆரம்ப சபையில் தலைவர்கள் மூன்று பிரினர்களாக இருந்தனர். திருத்தூதர்கள், மூப்பர்கள், திருத்தொண்டர்கள் ஆகியோரே இந்த முப்பிரிவினராவார்கள். பின்னர் திருத்தூதர்களின் இடத்தை வகித்தவர்கள் ஆயர்களெனவும், மூப்பர்களின் இடத்தை வகித்தவர்கள் குருவானவர்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.

கி.பி நான்காம் நூற்றாண்டில் உரோம், ஜெருசலேம், கொன்ஸ்தாந்தி நோபிள், அந்தியோக்கியா, அலெக்சாந்திரியா போன்ற கிறிஸ்தவ சமயம் தொடர்பான முக்கிய நகரங்களில் பெற்றியாக் என்போரும் பெரிய நகரங்களைக் கொண்ட பிரதேசத்தில் மெட்ரோபொலிட்டன் எனும் பேராயர்களும், நகரங்களுக்குப் பொறுப்பாக அவர்களும், அந்த ஆயர்களின் கீழுள்ள சிறு பிரதேசங்களிலுள்ளோர் குருமார்களெனவும் அறிமுகமாகினர்.

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ சமயம் தொடர்பாக முக்கிய நகரங்களுக்குப் பொறுப்பானவர்கள் | → | பெற்றியாக் |
| பெரிய பிரதேசங்களுடனான நகரங்களுக்குப் பொறுப்பானவர்கள் | | மெற்றோபொலிட்டன் பேராயர்கள் |
| நகரங்களுக்குப் பொறுப்பானவர்கள் | | ஆயர்கள் |
| ஆயர்களின் சிறு பிரதேசங்களுக்குப் பொறுப்பானவர் | | குருமார்கள் |

அனைத்து ஆயர்களிலும், பெற்றியாக்களிலும் உரோமில் இருந்த ஆயர் திருச்சபையின் தலைவராகக் கருதப்பட்டார். அவர் பேதுருவின் இடத்தில் உள்ளவர் எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டார். பிற்காலத்தில் இந்தப் பதவி பாப்பரசர் பதவியாக அறிமுகமானது. தற்பொழுதும் கூட பாப்பரசர் உரோம நகர் ஆயராக கருதப் படுகிறார்.

## பாப்பரசர் பதவி



*பாப்பரசர்*
*படம் 5.6*

கி.பி நான்காம் நூற்றாண்டு முதல் படிப்படியாக வளர்ச்சியடைந்த பாப்பரசர் பதவி, ஐரோப்பாவில் சக்திமிக்க பதவியாக மாறியது. உரோமப் பேரரசை வீழ்ச்சியுறச் செய்த கோத்திர மக்கள், கிறிஸ்தவ சமயத்தை ஏற்றுக்கொண்டதுடன் பாப்பரசரினதும், திருச்சபையினதும் அதிகாரம் மேலும் வலுவடைந்தது.

உரோமப் பேரரசின் கீழ் இல்லாத பிரதேசங்களில் வாழ்ந்த ஒஸ்ரோகொத், விசிகொத், பிரேங், அங்லோ சாக்சன் போன்ற கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் உரோமப் பேரரசை வீழ்ச்சியுறச் செய்து முறையே இத்தாலி, ஸ்பானியா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் குடியேறினர். உரோமப் பேரரசின் வீழ்ச்சியின் பின்னர்

ஆக்கிரமிப்பாளர்களான மக்களுக்குக் கிறிஸ்தவ சமயத்தைத் தெளிவுபடுத்துதல் ஆசீர்வதிப்பர் சபை உள்ளிட்ட பல துறவற சபைகளால் மேற்கொள்ளப்பட்டன.

மத்திய காலத்தின் நடுப்பகுதியில் ஐரோப்பா முழுவதும் கிறிஸ்தவ சமயம் பரவியிருந்ததுடன் திருச்சபைக்கும், பாப்பரசருக்கும் நிறைய அதிகாரங்கள் இருந்தன.

**திருச்சபைக்கு:**

✶ ஏராளமான நிலங்கள் இருந்தது.
✶ கல்வி முற்றிலும் திருச்சபையை மையமாகக் கொண்டிருந்தது.
✶ ஐரோப்பாவில் எல்லா நாடுகளிலுமிருந்து வரியைப் பெற்றுக் கொள்ளும் உரிமை திருச்சபைக்கு இருந்தது.

## நிலமானிய முறை

### முன்னுரை

மானியம் என்பது சேவையாகும். நிலம் என்பது பூமி. இதன்படி மானியத்துடன் கூடிய நிலம் 'நிலமானியமுறை' எனப்படும். நாட்டின் பொருளாதார, அரசியல், சமூகப், பண்பாடு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட முறை மானியமுறை எனப்படுகின்றது.

★ மத்திய காலத்தில் ஐரோப்பாவிலுள்ள அநேகமான நாடுகளில் மானிய முறை நிலவி வந்தது. நிலம் அரசனுக்குச் சொந்தமாக இருந்தது. நாட்டை நிர்வாகம் செய்வதற்கு அரசனுக்கு வேண்டிய சேவைகளை ஆற்றுவோர் வேதனத்துக்குப் பதிலாக நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இப்படியாக நிலத்தைப் பெற்ற பிரபுக்கள் அந்நிலங்களைப் பயன்படுத்தியமைக்கு கைமாறாக அரசனுக்கு சேவை செய்தனர்.

★ பிரபுக்கள் அந்நிலங்களைத் தமக்குக் கீழ் மட்டத்திலிருந்தவர்களுக்குப் பயிர் செய்தற் பொருட்டுப் பகிர்ந்து கொடுத்தனர். இப்படியாக நிலங்களைப் பெற்றவர்கள் அவற்றைப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தியதோடு அதற்குப் பதிலாக பிரபுக்களுக்கு வேண்டிய பல்வேறு சேவைகளை இலவசமாக வழங்கினர்.

ஒருவன் செய்யும் சேவைக்கு வழங்கும் வேதனத்திற்குப் பதிலாக அவனுக்கு நிலம் வழங்கப்பட்டது. அந்த நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு சேவையை வழங்குதல் **நிலமானிய முறை** எனப்படும். மத்திய காலத்தில் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் பொதுவாக இம்முறை நிலவியது.

மத்திய ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டு ரீதியில் மானிய முறைக்குப் பழக்கப்பட்டு இருந்தன. அது புராதன காலத்தினின்றும் நவீன காலத்தினின்றும் வேறுபடும் விசேட பண்பாகும்.

## நிலமானிய முறையின் ஆரம்பம்

உரோமப் பேரரசு வீழ்ச்சியுற்ற காலப்பகுதியான கி.பி 5 ஆம் நூற்றாண்டிலேயே ஐரோப்பாவில் மானிய முறை ஆரம்பமானது. மானிய முறை ஆரம்பமாவதற்கு முக்கிய காரணம் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாகும். கி.பி 5 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 10 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் ஐரோப்பா இரண்டு ஆக்கிரமிப்புக்களுக்கு உள்ளாகியது.

01. உரோமப் பேரரசுக்கு எதிராகக் கொத், ஹன், பிரேங், அங்லே ஜஸ்லாவ் சக்சன் ஆகிய கோத்திரங்களைச் சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு முதலாவது ஆக்கிரமிப்பாகும். அன்றைய உரோமப் பேரரசிற்கு உட்படாத இன்றைய ஜேர்மனிப் பிரதேசத்திலிருந்தே அவர்கள் வந்தனர்.

02. கி.பி 1000 ஆண்டளவில் வடக்கிலுள்ள வைக்கின்ஸ் எனப்பட்ட கோத்திர மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு இரண்டாவது ஆக்கிரமிப்பாகும். நோர்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய பிரதேசங்களிலிருந்தே இவர்கள் வந்தனர்.

★ வெளிநாட்டு ஆக்கிரமிப்பால் உரோமப் பேரரசு வீழ்ச்சியுற்றதால் மக்களுக்குப் பாதுகாப்பை வழங்க ஆட்சியாளர்களால் முடியவில்லை. ஆதலால் பெருந்தொகையான மக்கள் தம்மிடமிருந்த நிலங்களைப் பிரபுக்களுக்குக் கையளித்து, அவர்களுக்கு சேவை செய்வதாக வாக்களித்ததுடன், பிரபுக்களின் பாதுகாப்பையும் எதிர்பார்த்தனர். இதன்படி ஆரம்பத்தில் பிரபுக்கள் உரோமப் பேரரசின் மக்களின் நிலங்களையே தமதாக்கிக் கொண்டனர்.

★ அரசர்கள் பலவீனர்களாக இருந்ததால் அவர்கள் தங்களது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு (தக்க வைத்துக் கொள்வதற்கு) பிரபுக்களின் உதவி தேவையாக இருந்தது. எனவே அரசனிடமிருந்த நிலங்கள் பிரிக்கப்பட்டுப் பிரபுக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது. அவற்றைப் பயன்படுத்துவதற்காகப் பிரபுக்கள் அரசனுக்கு சேவை செய்தனர்.

இந்த நிலங்களைப் பிரபுக்களிடையே பகிர்ந்தளித்தல், அதன் பொருட்டு செய்யப்பட வேண்டிய சேவைகள் என்பவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் போன்ற தொடர்பான பழக்கவழக்கங்கள் இருந்தன. இவை தொடர்பான எழுத்து மூலமான ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை. மரபு ரீதியாக இவை நடைபெற்றன.

உரோமப் பேரரசிற்கும் அதன்பின்னர் 10 ஆம் நூற்றாண்டில் பிரான்சைச் சுற்றிக் கட்டியெழுப்பப்பட்ட பேரரசிற்கும் எதிராக ஏற்பட்ட வெளிநாட்டு ஆக்கிரமிப்பைக் காரணமாகக் கொண்டு பல விடயங்கள் வெளியாகின.

★ அரசியல் நிலை தளர்ந்தமை

★ அரசர்கள் பலவீனமடைந்தமை

★ பேரரசு முழுவதும் நிலைகொண்ட கோத்திர மக்களிடையே நிலையான அரசியல் முறைமை இல்லாமை.

★ ஐரோப்பா முழுவதிலும் கவலைக்குரிய நிலைமை ஏற்படல்

★ மக்களுக்குப் பாதுகாப்பின்மை.

இந்தப் பின்னணியில் பிரபுக்கள் பலம் வாய்ந்தவர்களானார்கள். அரசர்கள் பலவீனமானவர்கள். இந்நிலையில் பணப்பரிமாற்றம் இல்லாது நிலத்தை அனுபவிப்பதற்கான சேவையை வழங்கும் முறையான நிலமானிய முறை தோன்றியது.

## நிலமானியப் பொருளாதார முறையின் விசேட பண்புகள்

★ நிலம் முக்கிய உற்பத்திக் காரணியாகியமை.
★ கிராமத்தை மையமாகக் கொண்ட பொருளாதாரம்.
★ விவசாயம் பொருளாதாரத்தின் அடிப்படையானமை
★ சுயதேவைப் பொருளாதாரம் உருவானமை.
★ நகரங்கள் இல்லாமை.
★ பணப்புழக்கம் கட்டுப்படுத்தப்பட்டது.
★ வர்த்தகம் சிறிதளவே நடைபெறல்.
★ அதுவும் பண்டமாற்று முறையில் நடைபெறல்.

மானியமுறையின் பொருளாதார அமைப்பானது விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பண்ணை அதன் முக்கியமான பொருளாதாரக் கூறாக இருந்தது.

★ ஒவ்வொரு பண்ணையிலும் பற்றைக் காட்டு நிலம், பொதுவான புல்வெளி, பாழ்நிலம் எனப்பல பகுதிகள் காணப்பட்டன. பண்ணை மக்கள் அனைவரும் இவற்றை, மந்தைகளை மேய்த்தல், விறகு சேகரித்தல், தேன் சேகரித்தல், வேட்டையாடுதல் போன்ற கருமங்களுக்கு பயன்படுத்தினர்.


★ பிரபுக்களின் நிலம் பயிர் செய்யும் பொருட்டு பொதுமக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. இவர்கள் தமியர்கள் எனப்பட்டனர். தமியர்கள் தமக்குக் கிடைத்த காணியை அனுபவிப்பதற்கு கைமாற்றாக பிரபுக்களின் நிலத்தில் ஊதியமின்றி வேலை செய்வதற்கு அல்லது அறுவடையில் ஒரு பகுதியை கொடுப்பதற்கு அல்லது குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்தை செலுத்துவதற்கு கடமைப்பட்டிருந்தனர்.

★ பண்ணையின் உயர்ந்த இடத்தில் அந்தப் பண்ணைக்குச் சொந்தமான பிரபுவின் மாளிகை இருந்தது.

★ அதியுயர் இடத்தில் ஆலயம் அமைந்திருந்தது. திராட்சை இரசம் (வைன்) செய்யும் இயந்திரங்கள், பாண் செய்யும் பேக்கரிகள், கோதுமை அரைக்கும் தொழிற்சாலைகள் என்பன பிரபுக்களிடம் இருந்தன. தமியர்கள் செலவு செய்து (பொருட்களின் மூலம்) அவற்றில் பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நிலமானிய முறையின்மூலம் பண்ணைகள் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் கூறாக இருந்தது.

## நிலமானிய அரசியல் முறையின் விசேட பண்புகள்



நிலமானியமுறையின் பண்ணை அமைப்பைக் காட்டும் படம்
படம் 5.6

★ நாட்டின் அனைத்து இடங்களும் அரசனுக்குச் சொந்தம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ அரசனுக்குத் தேவையான சேவையைப் பெறும்பொருட்டு நிலங்கள் பிரபுக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன்படி பிரபுக்களுக்கு ஏராளமான நிலம் உரிமையாக இருந்தது.

★ அரசர்கள் பலம் வாய்ந்தவர்களாக இருக்கவில்லை.

★ நாட்டில் பல பாகங்களிலும் பிரபுக்கள் பலம் வாய்ந்தவர்களாக திகழ்ந்தனர்.

★ அவர்கள் தமது பிரதேசங்களில் சட்டங்களை விதித்தல், வரிஅறவிடுதல் போன்றவற்றைச் செய்யக்கூடிய நிலையைப் பெற்றிருந்தனர்.

★ அரசாங்கத்தில் பதவி வகித்தல், நிலங்களை உரிமையாக்கிக் கொள்ளல் என்பன பிரபுக்களுக்கு மாத்திரமே உரியதாக இருந்தது.

★ படையைக் கூட்டுதல், அதனைப் பரிபாலித்தல் போன்றவையும் பிரபுக்களுடைய கையிலேயே இருந்தது.

★ அரசனுக்கு படை தேவைப்படும்போது அவன் பிரபுக்களின் உதவியை நாட வேண்டியிருந்தது.

★ பிரபுக்கள் தமது அதிகாரத்தைப் பரவலாக்கும் பொருட்டு அடிக்கடி தம்மிடையே சண்டையிட்டனர். அவை இருசாராரிடையேயான சண்டை என அழைக்கப்பட்டது.

★ மானிய அரசியல் முறையானது பலம் வாய்ந்த பிரதேச ஆட்சியாளர்களைக் கொண்ட ஒரு வகையில் கவலைக்குரிய ஆட்சியாக விளங்கியது.

## நிலமானிய முறையின் அரசியலில் அதிகாரம் பரவலாக்கப்பட்டமை.

## நிலமானிய சமூக முறை

நிலமானிய முறையில் மக்களிடையே சமூக சமமின்மை காணப்பட்டது. பிறப்பின்படி சமுதாயத்தில் உயர்வு, தாழ்வு காணப்பட்டமை.

★ பிறப்பிலேயே உயர்வாகக் கருதப்பட்டவர்கள் பிரபுக்களாவர். அரசன், பிரபுக்கள், குருமார் என்போர் அப்பிரிவினுள் அடங்குவர்.

★ பிறப்பிலேயே கீழானவர்களாகக் கருதப்பட்டோர் சாதாரண மக்களாவர். இதன்படி மக்களே சமுதாயத்தில் பெரும்பான்மையினராகக் காணப்பட்டனர்.

★ பிரபுக்கள் மாளிகைகளில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தனர்.

★ தமியர்கள் குடிமக்கள் சிறு இல்லங்களில் எளிய வாழ்க்கை வாழ்ந்தனர்.

★ எவ்வித சலுகையும் பெற்றிராத தமியர்கள்(குடிமக்கள்) அரசனுக்கும், பிரபுக்களுக்கும் திருச்சபைக்கும் வரி செலுத்த வேண்டிய நிலை இருந்தது.

★ மானியமுறை காலத்தில் தனிமனிதன் முக்கியத்துவம் பெறவில்லை. பொதுத் தன்மையும் கூட்டுறவுமே முக்கியத்துவம் பெற்றன.

★ தமியர்கள் வேளாண்மை உட்பட அனைத்துச் செயற்பாடுகளையும் ஒன்றிணைந்து (ஒற்றுமையாக) செய்தனர். வர்த்தகம் மற்றும் கொடுக்கல் வாங்கலின் போது ''Guild'' என்ற பொதுவான அமைப்புக் காணப்பட்டது.

சாதாரண மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்ந்தனர். பிரபுக்கள் அதிகாரத்தின் பொருட்டு தம்மிடையே அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டனர்.

நிலமானிய முறையில் சமூகத்தில் சமநிலை காணப்படவில்லை. மக்களிடையே உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு காணப்பட்டது.

## நிலமானியமுறைப் பண்பாடு

மத்தியகால ஐரோப்பாவில் நடைமுறையிலிருந்த மானிய முறையில் காணப்பட்ட அரசியல், பொருளாதார, சமூக அமைப்பிற்கு ஏற்றதாகவே பண்பாடும் இருந்தது. அதன்படி மத்தியகாலப் பண்பாடு புராதன காலத்தையும், நவீன காலத்தையும் விட வேறுபட்டதாகக் காணப்பட்டது.

## நிலமானிய முறைக் காலத்தில் ஐரோப்பாவில் காணப்பட்ட பண்பாட்டு இயல்புகள்

★ பாப்பரசரைத் தலைவராகக் கொண்ட கத்தோலிக்கத் திருச்சபை முதன் நிலையில் இருந்தது.

★ கல்விச் செயற்பாடுகள் திருச்சபையை மையமாகக் கொண்டதாக இருந்தது.

★ மக்கள் வாழ்க்கை சமயத்தோடு தொடர்புடையதாக இருந்தது.

★ அனைத்துப் பண்பாடுகளும் சமயத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்தன.

★ சங்கீதம், நாடகம், சித்திரம், சிற்பம் என்பன லௌகீகத்தைப் பிரதிபலிப்பதாக அமையில்லை. அவை சமயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்தது.

★ மக்களது வாழ்க்கை ஒழுக்கமுடையதாககக் காணப்பட்டது.

## நிலமானிய முறையின் வீழ்ச்சி

கி.பி 5 ஆம் நூற்றாண்டு முதல் படிப்படியாக வளர்ச்சியடைந்த நிலமானிய முறை 13 ஆம் நூற்றாண்டுமுதல் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. அதற்கான காரணங்கள் பல உண்டு.

★ அடுத்த அத்தியாயத்தில் நாம் கற்க உள்ள சிலுவை யுத்தம் நிலமானிய முறை வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

★ நிலமானிய முறை சிலுவை யுத்தத்தின் காரணமாக வீழ்ச்சியடைந்தது.

**சிலுவையுத்த காலத்தில்........**

★ வர்த்தகம் முன்னேற்றமடைந்தது.

★ நகரங்கள் வளர்ச்சியடைந்தன.

★ பணப்புழக்கம் அதிகரித்தது.

★ நீண்ட கால யுத்தத்தில் ஈடுபட்ட பிரபுக்கள் பலர் இறந்தனர்

★ யுத்தத்திற்கு சென்ற தமியர்கள் மீண்டும் பண்ணைகளுக்குச் செல்லாது நகரங்களில் தங்கி வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டனர். இதனால் மானியமுறை வீழ்ச்சியடைந்தது.

★ அரசர்கள் பலம் வாய்ந்தவர்களாகிப் பலம் வாய்ந்த இராச்சியங்களைக் கட்டியெ முப்பியதால் நிலமானிய அரசியல் முறை வீழ்ச்சி அடைந்தது.

★ பணப்புழக்கம் அதிகரித்ததால் நடுத்தர வகுப்பினர் எழுச்சியுற்றனர்.

பண்ணைமுறை வீழச்சியடைந்ததுடன் பிரபுக்களின் சமூகநிலையும் தளர்ச்சியுற்றது. அத்தோடு நிலமானிய முறையும் வீழ்ச்சியடைந்தது.

★ 12 ஆம் நூற்றாண்டு முதல் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக நிலமானியமுறைக் காலத்தில் இருந்த சமய சமூக நிலைமைகள் வீழ்ச்சியடையத் தொடங்கின.

15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவின் சகல நாடுகளிலும் நிலமானிய முறை வீழச்சியடைந்தது. நவீன ஐரோப்பாவின் உதயம் ஆரம்பமாகியது.

**பயிற்சி**

01. மத்திய காலம் என்றால் என்ன என்பதை அறிமுகப்படுத்துக.

02. நிலமானிய முறை என்றால் என்ன என்பதை தெளிவுபடுத்துக.

செயற்பாடு

1. *நிலமானிய முறையின் வீழச்சிக்கான காரணங்களை அட்டவணைப்படுத்துக.*

2. *“மத்திய கால ஐரோப்பிய நிலமானிய முறை” என்ற தலைப்பில் சுவர்ப்பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று எழுதுக.*

## சிலுவை யுத்தம்

### முன்னுரை

கிறிஸ்தவ சமயத்தின் ஸ்தாபகரான இயேசு பலஸ்தீனத்தில் பெத்தலகேம் எனும் ஊரில் பிறந்தவரென்றும் ஜெருசலேமில் சிலுவையில் அறையப்பட்டு மரணமடைந்தவரென்றும் நாம் கற்றுள்ளோம். இந்த இடங்களை இப்பொழுதும் கிறிஸ்தவர்கள் புனித பூமியாகக் கருதுகிறார்கள். எனவே இந்த இடங்களை முன்னிட்டு பிற மதத்தினரால் சவால்கள் ஏற்படும்போது அவர்கள் ஆத்திரமடைகிறார்கள்.

இஸ்லாமியர்களால் அப்பிரதேசங்களுக்கு சவால்கள் ஏற்பட்டபோது ஐரோப்பா முழுவதிலும் பரவியிருந்த பாப்பரசரைத் தலைவராகக் கொண்ட கிறிஸ்தவர்கள் ஆத்திரமடைந்தனர். இவற்றை மனதிலிருத்தி சிலுவை யுத்தம் என்றால் என்ன என்பதனைக் கற்போம். பல நூற்றாண்டுகளாக உரோமப் பேரரசின் கீழிருந்த பலஸ்தீனர் 7 ஆம் நூற்றாண்டில் அரேபியர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தனர். எனினும் கிறிஸ்தவர்கள் பலஸ்தீனத்திலிருந்த புனிதத் தலங்களுக்கு எவ்வித இடையூறுமின்றி சென்று வந்தனர். கி.பி 11 ஆம் நூற்றாண்டளவில் செல்யுக்ஸ் துருக்கியர்கள் (Seljuk Turks) அப்பிரதேசங்களைக் கைப்பற்றினர். அதன்பின்னர் கிறிஸ்தவர்கள் அப்பிரதேசங்களில் திருயாத்திரை செல்வதற்குத் தடையேற்பட்டது. புனித யாத்திரையை மேற்கொண்டவர்கள் துன்புறுத்தப்பட்டதுடன், சிலர் கொல்லப்பட்டனர்.

இதனைக் கண்டு கலக்கம் அடைந்த பாப்பரசர் புனித பூமியைப் பாதுகாப்பதற்காக ஒன்று திரளும்படி ஐரோப்பாவிலிருந்த கிறிஸ்தவர்களைக் கேட்டுக் கொண்டார். இதன் விளைவாகப் பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி போன்ற சகல கிறிஸ்தவ நாடுகளும் அரசர்கள், பிரபுக்களின் தலைமையின் கீழ் பெருந்திரளாக அணி திரண்டனர். இவர்கள் செய்த யுத்தம் கிறிஸ்தவ சமயத்தை முன்னிட்டு செய்த படியால் ‘‘சிலுவை யுத்தம்’’ என்று குறிப்பிட்டனர்.

வெற்றி தோல்விகள் இரு சாராருக்கும் மாறி, மாறி ஏற்பட்டதுடன் இரண்டு நூற்றாண்டுகள் வரை சிலுவை யுத்தங்கள் நடைபெற்றன. எனவே சிலுவை யுத்தம் என்பது ஒரு யுத்தம் மட்டுமல்ல. அது பல யுத்தங்களாக இருந்தன. இந்த யுத்தங்களின் இறுதி விளைவாகக் கிறிஸ்தவர்களால் புனித பூமியைக் கைப்பற்ற முடியாது போனதுடன் ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார பண்பாட்டின் மத்திய நிலையமாக விளங்கிய கொனஸ்தாந்திநோபிள் கி.பி. 1453ஆம் ஆண்டு துருக்கியர் வசமானதும் கிறிஸ்தவர்கள் சமய ரீதியாகவும், பொதுவாக ஐரோப்பியர்கள் அரசியல், பொருளாதார சமூக ரீதியாகத் தோல்வியடைந்திருந்தனர்.

### சிலுவை யுத்தத்தின் விளைவுகள்

சிலுவை யுத்தமானது ஐரோப்பாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

★ சிலுவை யுத்தம் நிலமானிய முறையின் வீழ்ச்சிக்கு பலவிதத்திலும் வழிவகுத்தது.

★ மத்தியகால ஐரோப்பாவில் காணப்பட்ட பல இயல்புகள் வீழ்ச்சியுற்று நவீன காலம் தோன்றவதற்கு வழி வகுத்தது.

★ கீழ் நாடுகளில் காணப்பட்ட அறிவும், உற்பத்திப் பொருட்களும் ஐரோப்பாவைச் சென்றடைந்தன.

எடுத்துக்காட்டாக

★ இந்தோ அராபிய இலக்கங்கள் கேத்திரக் கணிதம், கீழ்நாட்டு மெய்யியல், கடதாசி, மாலுமிகளின் திசையறிகருவி என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

★ கீழ்நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட வாசனைத் திரவியங்கள், துணிவகைகள், மஸ்லின், சீன, மருந்துவகைகள், பெறுமதி வாய்ந்த இரத்தினக்கற்கள், கண்ணாடி, பழவகைகள் என்பனவற்றுக்கு ஐரோப்பிய நாடுகளில் கேள்வி அதிகரித்தது.

★ இவ்வாறு பொருட்களுக்கு கேள்வி அதிகரிக்கவே மேல்நாட்டு - கீழ் நாட்டு வர்த்தகம் விருத்தி அடைந்தது.

★ மத்தியகால ஐரோப்பாவில் நிலமானிய முறையில் கட்டுப்பட்டிருந்த மக்கள், சிலுவை யுத்தத்தின் காரணமாக வெளி உலகுடன் தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மத்திய கால ஐரோப்பாவை நவீன கால ஐரோப்பாவாக மாற்றுவதற்கு சிலுவை யுத்தம் உதவியது.

செயற்பாடு

*மத்திய கால ஐரோப்பாவில் சிலுவை யுத்தத்தின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் சுவர்ப் பத்திரிகைக்கு கடிதம் ஒன்று எழுதுக.*

**பயிற்சி**

★ சிலுவை யுத்தம் என்றால் என்ன என்பதை விளக்குக.

★ சிலுவை யுத்தத்தின் காரணமாக ஐரோப்பியாவிற்கு கீழ்நாடுகளிலிருந்து கிடைத்தவை எவை?

★ வேதாகமம், கன்னி மரியாள், எருசலேம், இறைமகன், படைப்பின் கர்த்தா என்பன பற்றிய சிறு குறிப்புகளுடனான கைநூல் ஒன்றைத் தயாரிக்குக.